सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, गुरुवार, 14 अकतूबर 1999/1921 सका

New Delhi, Thursday, 14th October 1999/1921 Saka

புது தில்லி, வியாழக்கிழமை 14, அக்டோபர் 1999/1921 சக


## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department) New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புது தில்லி

The Translation in Tamil of the Departmental Inquiries (Enforcement of Attendance of Witnesses and Production of Documents) Act, 1972 (18 of 1972), The Anti-Apartheid (United Nations Convention) Act, 1981 (48 of 1981), The Railway Property (Unlawful Prossession), Act, 1966 (29 of 1966), The Presidents Emoluments and Pension Act, 1951 (30 of 1951), The Water (Prevention and Control of Pollution) Cess Act 1977 (36 of 1977), The Dramatic Performances Act, 1876 (19 of 1876), The Delivery of Books and Newspapers (Public Libraries) Act, 1954 (27 of 1954), The Forfeited Deposits Act, 1850 (25 of 1850), The Family Courts Act, 1984 (66 of 1984), The Seamen's Provident Fund Act, 1966 (4 of 1966), The Agricultural and Processed Food Products Export Development Authority Act, 1985 (2 of 1986), The Administrative Tribunals Act, 1985 (13 of 1985) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

துறை விசாரணைகள் (சாட்சிகளை முன்னிலையாகும்படியும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படியும் கட்டாயப்படுத்துதல்) சட்டம், 1972 (18/1972), இன ஒதுக்கல் ஒழிப்பு (ஐக்கிய நாடுகள் இணங்காறு) சட்டம், 1981 (18/1981), இருப்பூர்தியச் சொத்து (சட்ட முரணான உடைமை) சட்டம், 1966 (29/1966), குடியரசுத் தலைவரின் பதவியூதியங்கள் மற்றும் ஓய்வூதியச் சட்டம், 1951 (30/1951), நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரிச்சட்டம், 1977 (36/1977), நாடகக்கலை நிகழ்ச்சிகள் சட்டம், 1876 (19/1876), நூல்களையும் செய்தித்தாள்களையும் வழங்குதல் (பொது நூலகங்கள்) சட்டம், 1954 (27/1954), பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள் சட்டம், 1850 (25/1850), குடும்ப நீதி மன்றங்கள் சட்டம், 1984 (66/1984), கடலோடிகள் வருங்கால வைப்பு நிதியச்சட்டம், 1966 (4/1966), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார அமைப்புச் சட்டம், 1985 (2/1986) நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985, (13/1985), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச்சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 71.00]

# நிருவாகப் பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985

## (சட்ட எண் 13/1985)

[1985, பிப்ரவரி 25]

அரசமைப்பின் உறுப்பு 323ஆ வை ஒட்டி ஒன்றியத்தின் அல்லது மாநிலம் எதனின் அலுவற்பாடுகளுடனோ, இந்திய ஆட்சி நிலவரைக்குள் உள்ள அல்லது இந்திய அரசாங்கத்தின் கட்டாள்கையிலுள்ள உள்ளாட்சி அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டாள்கையிலுள்ள கூட்டுருமம் அல்லது சங்கம் எதனின் அலுவற்பாடுகளுடனோ தொடர்புடைய அரசுப் பணியங்களுக்கும் பணியடைக்கும் ஆளெடுத்தலும், அவற்றிற்கு அமர்த்தப்பெற்றவர்களின் பணிவரைக்கட்டுகளும் பொறுத்த பூசல்கள், முறையீடுகள் ஆகியவற்றை நிருவாகப் பணித் தீர்ப்பாயங்கள் நீதி முறையில் தீர்ப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்து ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

1. (1) இந்தச் சட்டம், நிருவாகப் பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது,—

(அ) மைய நிருவாகப் பணித் தீர்ப்பாயத்திற்குத் தொடர்புடையதாக இருக்கிற அளவுக்கு, இந்தியா முழுவதையும்,

(ஆ) மாநிலங்களின் நிருவாகப் பணித் தீர்ப்பாயங்களுக்குத் தொடர்புடையதாக இருக்கிற அளவுக்கு ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும்,

அளாவி நிற்கும்.

(3) இந்தச் சட்டத்தின் வகையங்கள், மைய நிருவாகப் பணித் தீர்ப்பாயத்திற்குத் தொடர்புடையதாக இருக்கிற அளவுக்கு, மைய அரசாங்கம் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் நாளன்று செல்லாற்றல் பெறும்.

(4) இந்தச் சட்டத்தின் வகையங்கள், ஒரு மாநிலத்தின் நிருவாகப் பணித் தீர்ப்பாயம் ஒன்றிற்குத் தொடர்புடையதாக இருக்கிற அளவுக்கு, மைய அரசாங்கம் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் நாளன்று செல்லாற்றல் பெறும்.

2. இந்தச் சட்டத்தின் வகையங்கள்.— சட்டம், குறித்த சிலருக்குப் பொருந்தாது.

(அ) கடற்படை, தரைப்படை அல்லது வான்படையின் உறுப்பினர் எவருக்கும் அல்லது ஒன்றியத்தின் பிற ஆயுதப்படையினர் எவருக்கும்;

(ஆ) [1][****]

(இ) உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றம் எதனின் அல்லது அதன் கீழமை நீதிமன்றங்கள் எதனின் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கும்,

(ஈ) நாடாளுமன்ற ஈரவைகளில் எதற்குமான செயலகத்தின் பணியாளர் தொகுதியை அல்லது மாநிலச் சட்டமன்றம் எதனின் அல்லது அதன் அவை ஒன்றை அல்லது ஒரு சட்டமன்றத்தைக் கொண்டிருக்கும் ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றைப் பொறுத்த நேர்வில், அந்தச் சட்டமன்றத்தின் செயலகத்திற்கான பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்டுள்ள எவருக்கும்,

பொருந்துதல் ஆகாது.

---

1. [கூறு (ஆ) 19/1986 சட்டத்தின் பிரிவு 3-ஆல் விட்டுவிடப்பட்டது]